மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாடசா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தனியாகத் தொழிலமைச்சர் அவர்களுக்குப் போட்டால் நிச்சயமாகப் பதில் சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Land for Mentally Retarded Children's Home

*117 *Q.*—Thiru R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to grant lands for locating the home for the mentally retarded children run by the Guild of Service at Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சென்னை கில்ட் ஆப் சர்வீஸின் ஆதரவில் இயங்கும் பால விகாரிலுள்ள மன வளர்ச்சி குன்றிய சிறுவர் சிறுமியர்க்காக ஒரு விவசாயப் பண்ணை தொடங்குவதற்கு, செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமத்தில் 25 ஏக்கரா நிலத்தை அளிக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த மன நோய் இருக்கின்ற குழந்தைகளுக்கு விடுதி கட்ட வேண்டுமென்று மகாபோதி சொசைடி மூலமாக விண்ணப்பம் அரசுக்கு வந்திருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

எண்ணெய், பருப்பு விற்பனை

*118 **வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

எண்ணெய், பருப்பு வகைகளின் விற்பனையை அரசு வர்த்தக கார்ப்பரேஷன் நேரடியாக மேற்கொள்ள உத்தேசித்துள்ளதா ?

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகம், வட இந்திய மாநிலங்களில் பருப்பு வகைகள் விளைகின்ற இடங்களிலிருந்தும், கிடைக்கும் பொழுதெல்லாம் இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும் பருப்பு வகைகளை மொத்தமாக வாங்கி, சென்னை மாநகரிலும் ஏனைய பெரு நகரங்களிலும் கழகத்தினால் நடத்தப்படுகின்ற சில்லறை விலைக் கடைகளின் மூலமாக அவற்றை விற்கிறது. சூரியகாந்தி எண்ணெய், வனஸ்பதி, தூய்மைப்படுத்தப்பட்ட எண்ணெய் ஆகியவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தனியார் கடைகளில் விற்கப்படுகிற பருப்பு, எண்ணெய்களை விட நமது அரசாங்கக் கடைகளில் விலை குறைவாக இருந்தாலும் கூட மக்களுக்குச் சரியான முறையில் தெரியவில்லை; இவ்வளவு விலை குறைவாக விற்கப்படுகிறது என்பதற்கு நல்ல விளம்பரம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: விலை குறைவாக இருந்தும் வாங்குகிறவர்கள் ஆங்காங்குள்ள கடைகளில் கடன் வாங்குகிற காரணத்தினால் தொடர்ந்து அந்தக் கடைகளிலேயே வாங்குகிறார்கள். இங்கே குறைந்த விலையில் இருந்தாலும் அவர்கள் இன்னும் தங்கள் நிலையைச் சரிப்படுத்திக் கொள்ளவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சிவில் சப்ளை கார்ப்பரேஷனால் சென்னை நகரத்திலும், கோவை மாநகரிலும்தான் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்திலுள்ள பெரு நகரங்களில் பருப்பு விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன. அதைத் தடுக்க பெருத்த அளவில் வட மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்து தனியார் வியாபாரிகளுக்கும் கொடுத்து விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நமது மாநிலத்தில் பெரு நகரங்களில் நமது கடைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்றாலும் வாங்குகிற மக்கள் அங்கே வாங்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். நாம் முன்பு 986 டன் கொள்முதல் செய்ததில் 635 டன்தான் கிட்டத்தட்ட

சென்ற 1972 ஆகஸ்டில் இருந்து இதுவரை விற்பனையாகி யிருக்கிறது. எனினும் இப்போதும் இரண்டாயிரம் டன் வாங்கி யிருக்கிறோம், விற்குமா, நட்டம் வந்துவிடுமா என்கிற சந்தேக நிலையில்தான். நாம் வாங்கி தனியாரிடம் கொடுத்து விற்கச் சொல்கிற கொள்கை இன்னமும் வகுக்கப்படவில்லை.

திரு. எஸ். வடிவேல்: தஞ்சை மாவட்டத்தில் வயல் வரப்புகளில் துவரை பயிரிடுகிற பழக்கம் முன்பு இருந்தது. அதைப்போல இப்போதும் பயிரிட்டு துவரை உற்பத்தியைப் பெருக்க, அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: விவசாய இலாக்காவில் இப்போது திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பருப்பு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டு மென்று துவரை—நிலக்கடலை—நவரை சாகுபடியில் திட்டம் போட்டிருக்கிறார்கள். நமது நண்பர் சொன்னதுபோல வயல் வரப்புகளில் போடுவதன் மூலம் நிரந்தரப் பயன் இல்லை. சாதாரணமாக ஒரு குடும்பத்திற்குப் போதுமானது கூட கிடைக்காது. நமது மாநிலத்திற்கு 4 லட்சம் டன் தேவைப் படுகிறது. இரண்டு லட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு போதுமான நிலப்பரப்பும், அதற்குத் தகுந்த மண்வளமும் நமது தமிழ்நாட்டில் இல்லை என்ற காரணத்தினால் பெரும்பகுதி வெளி மாநிலங்களில் இருந்தே தருவிப்பது அவசியமாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் குறைந்த விலையில் எண்ணெய், பருப்பு விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்தக் கடைகள் பெரும்பாலும் எங்கே இருக்கின்றன என்கிற விளம்பரம் சரியாக இல்லாத காரணத்தினால் சூப்பர் மார்க்கெட் மூலமாக இவற்றை விற்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதையும் செய்ய முயற்சிக்கலாம். இந்தக் கடைகள் எங்கே இருக்கின்றன என்கிற விளம்பரம் சரியாக இல்லை என்றார்கள். நான் அதனையே படிக்கிறேன். (1) ஜார்ஜ் டவுன்—மூர் தெரு, (2) தங்கசாலை, (3) தண்டையார்பேட்டை, (4) பெரம்பூர்—வியாசார்பாடி, (5) வெங்கடேசபுரம், (6) நுங்கம்பாக்கம்—ஹாரிங்டன் ரோடு, (7) அசோக் நகர், (8) நந்தனம், (9) கோபாலபுரம், (10) சைதாப்

1973 ஆகஸ்ட் 13]

பேட்டை, (11) இந்திரா நகர், (12) சிந்தாதிரிப்பேட்டை, (13) கோமளீஸ்வரன்பேட்டை, (14) அண்ணா நகர், (15) சூளை—ஈ.டி. மில்ஸ் காம்பவுண்டு, (16) திருவல்லிக்கேணி—சின். என். கே. ரோடு, (17) தியாகராயநகர்.

திரு. ஏ. எம். இராஜா : பம்பாய் நகரத்தில் அங்கே இருக்கிற வியாபாரிகளை ஒன்றுகூட்டி, மக்கள் நலம் கருதி எண்ணெய் விலையை 7½ ரூபாய்க்குமேல் உயர்த்துவது இல்லை என்கிற முடிவுக்கு வரும்படி செய்திருப்பதாகத் தெரிகிறதே, அதுபோல நமது மாநிலத்திலும் வியாபாரிகளைக் கூட்டி வைத்து எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பம்பாய் நகரத்தில் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை பம்பாய் மாநில முதலமைச்சர் எடுத்துக்கொண்டதான செய்தி வந்தது. மறுநாளே இந்து செய்திப் பத்திரிகையில் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்பதாகவும் செய்தி வந்தது. எது சரி என்பதை ஆராய்ந்து பார்த்து, இங்கும் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடலாம்.

திருத்தங்கல் கூட்டுறவு விவசாயப்பண்ணை

***119 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருத்தங்கல் கிராமத்தில் 1958-ல் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் கூட்டுப்பண்ணை கலைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதில் ஏற்பட்ட நஷ்டத் தொகைக்காக எடுக்கப்பட்டுவரும் ஜப்தி நடவடிக்கைகளால் அப்பகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) & (உ) ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அதனால் யாரும் பாதிக்கப்படவில்லை.